நெடுநல்வாடையில் இடம்பெறும் வருணனைகள்

By

சாந்தினி, மு.

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாக்குமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

நெடுநல்வாடையில் இடம்பெறும் வருணனைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை, சங்க காலத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்வியலை எடுத்துரைக்கிறது. இதில் வருணனை என்பது புனைவுரை, விரிவாக்கம், கற்பனை எனப் பொருள்படும். நினைவுக் கற்பனை, ஆக்கக் கற்பனை ஆகியவற்றின் மூலம் கவிஞர் தம் படைப்பை அழகுபடுத்துகிறார். இக்கட்டுரை கொடுங்கோல் கோவலர், குளிரும் கூதிர்க்காலமும், சுற்றுச்சூழல், மலை போன்ற கோபுரம், அழகிய அந்தப்புரம், வட்டக் கட்டில், பஞ்சணை, புனையா ஓவியம், மாலைக்காலம் மற்றும் உவமைகள் ஆகிய வருணனைகளை விளக்குகிறது. இவ்வருணனைகளின் மூலம் சங்கத் தமிழரின் கலைநயமும், அவர்கள் ரசித்து வாழ்ந்த வாழ்வியலும் வெளிப்படுகின்றன என்பதை ஆராய்ந்து எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

கலைச்சொற்கள்: *நெடுநல்வாடை, வருணனைகள், மற்றும் சங்ககாலம்.*

முன்னுரை

மனித வாழ்க்கை உயர்வானது, அரிதானது. அத்தகைய வாழ்க்கையை ஒவ்வொருவரும் மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு, எளிமை என வெவ்வேறு விதமாக வாழ்கின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் இரசித்து வாழும்போது வாழ்க்கை இன்பமயமாகிறது. சங்ககால மக்கள் இயற்கையோடிணைந்த வாழ்வை மேற்கொண்டனர். இதனால் போட்டி, பொறாமை போன்றத் தீக்குணங்கள் மக்களிடையே இல்லை. ஐவகை நிலங்களுக்கு ஏற்றார் போல் வாழ்ந்தனர். தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை, புரிந்த வாழ்க்கையை, ரசித்த வாழ்க்கையை அழகிய இலக்கியங்களாகப் படைத்தனர். இவ்விலக்கியங்கள் இன்றும் தமிழரின் சிறப்பை உலகளவில் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இலக்கணக் கட்டுப்பாட்டுடன் கூடிய இவ்விலக்கியங்கள் படிக்க படிக்க சலிக்காத கற்பனை வளம் மிகுந்தவை. ஒரு சிறிய செய்தியைக் கூட அழகுணர்வுடன் பலவிதமான வருணனைகள் மூலம் சங்ககாலப் புலவர்கள் எடுத்துரைத்தனர். நக்கீரர் எழுதிய நெடுநல்வாடையில் இடம் பெற்ற வருணனைகளைக் காண்போம்.

திறவுச் சொற்கள்

1. வருணனை - புனைவுரை
2. கோவலர் - இடையர்
3. கூதிர்காலம் - மழையும், குளிர்ச்சியும் மிகுந்த காலம்
4. கோபுரம் - நகரத்தின் வாயில்
5. ஆந்தப்புரம் - அரசன், தேவி உறைவிடம்
6. பஞ்சணை - கட்டில் மேல் இடப்படும் மெத்தை
7. புனையா ஓவியம்- வண்ணம் தீட்டாத ஓவியம்

வருணனை

ஒரு நிகழ்ச்சியை அல்லது கதையை எழுத்து வடிவில் படைக்கும் பொழுது கவிஞனின் படைப்புத் திறன் வெளிப்படுகிறது. ‘‘வருணனை என்பதற்கு புனைவுரை, விரிவு, கற்பனை, இல்லாததைச் சுட்டிச் சொல்லுதல் என்று கழக அகராதி பொருள் கூறுகின்றது’’ (சேலை சகதேவ முதலியார் கழகத்தமிழ்க் கையகராதி, ப. 313).

இயல்பாகச் சொல்வதை அழகூட்டி கொஞ்சம் மிகைப்படுத்தி படிப்போர் இன்புறும் வண்ணம் கூறுவது வருணனை ஆகும். வருணனைகளுடன் ஒரு கருத்தை எடுத்துரைக்கும் பொழுது அலங்காரம் பண்ணிய மணப்பெண் போல இலக்கியம் ஜொலிக்கும். வெறும் கருத்தை எளிமையாகச் சொல்லும் பொழுது வண்ணம் தீட்டப்படாத ஓவியம் போல் இருக்கும். இத்தகைய வருணனைகளைப் படைப்பதற்குக்

கற்பனைத் திறன் தேவை. கற்பனை இரு வகைப்படும். நினைவுக் கற்பனை, ஆக்கக் கற்பனை.

நினைவுக் கற்பனை

நினைவுக் கற்பனை என்பது நாம் அனுபவித்த அல்லது படித்த ஒன்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவது ஆகும். பள்ளிப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்ப்பது நூற்பாக்களை நினைவுப்படுத்தி தேர்வு எழுதுவது நினைவுக் கற்பனையில் அடங்கும்.

ஆக்கக் கற்பனை

நாம் அனுபவித்த ஒன்றைப் புதிய கோணத்தில் சிந்தித்துப் படைப்பது ஆக்கக் கற்பனை ஆகும். சர் ஐசக் நியூட்டன் ஆப்பிள் பழம் மரத்தில் இருந்து கீழே விழுந்ததை எல்லோரும் பார்ப்பது போல் இயல்பாக சிந்திக்கவில்லை. மேலே போடப்படும் பொருள் கீழே விழுவதற்குப் புவிஈர்ப்பு சக்தி தான் காரணம் எனக் கண்டறிந்தார். இத்தகைய விஞ்ஞானிகள் கற்பனை ஆக்கக் கற்பனையே. இலக்கியம் படைக்கும் புலவர்களின் கற்பனையும் இவ்வகையே. முல்லைப் பூ மாலைக்காலம் மலர்வது இயல்பாக நடக்கும் ஒன்று. ஆனால் தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவி கார்காலம் வந்த பின்பும் தலைவன் வராததை நினைத்து அழுவதைப் பார்த்து முல்லைப்பூ சிரிப்பதாகக் குறுந்தொகைப் புலவர் கூறுகின்றார். இங்ஙனம் கவிஞன் தான் அனுபவித்து ரசித்தக் காட்சியைக் கற்பனை மூலம் மெருகேற்றிப் புதிதாகப் படைக்கிறான். ஒன்றுக்கொன்று சிறிதும் தொடர்பில்லாத நிகழ்வுகளை ஒருங்கிணைத்து படிப்போரின் கவனத்தை ஈர்க்கிறான். கவிதை இன்பத்தில் மூழ்கச் செய்கிறான்.

கொடுங்கோல் கோவலர்

ஆநிரைகளை மேய்க்கும் கோவலர்களை நக்கீரர் "கொடுங்கோல் கோவலர்" என வருணிக்கிறார். இச்சொல் இரு பொருள் தரும். ஆநிரைகளை வருத்துவதால் கொடுமையான கோலை உடைய கோவலர் என்றும், வளைந்த கோலை உடைய கோவலர் என்றும் பொருள். அவர்கள் காந்தளின் நீண்ட இதழ்களால் கட்டிய மாலைகளைத் தங்கள் தலையில் சூடிக் கொண்டனர். அம்மலர் மாலைகளில் மழைநீர் பட்டு உடம்பில் தெறிப்பதால் உடம்பில் குளிர்ச்சி ஏற்பட்டது. அக்குளிர்ச்சியைப் போக்க கைகளை நெருப்பருகில் காட்டிச் சூடேற்றித் தங்கள் கன்னங்களில் வைத்துக் கொண்டனர் (நெ.வா. வரிகள்: 3-8).

குன்றும் குளிரும் கூதிர்காலம்

பண்டைத் தமிழர்கள் மாறி வரும் காலநிலையைக் கூர்ந்து நோக்கி ஒரு பருவத்திற்கு இரண்டு மாதம் வீதம் வருடத்தை ஆறு பருவங்களாகப் பிரித்தனர். ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்காலம் ஆகும் என தொல்காப்பியர் கூறியுள்ளார். இது மழையின் தொடர்ச்சியும், குளிர்ச்சியும் மிகுந்த காலம் என்று தமிழண்ணல் உரை எழுதியுள்ளார்.

இக்கூதிர்காலத்தில் பறவைகள் மற்றும் விலங்குகள் குளிர்ச்சி மிகுதியால் செயலற்று இருந்ததை நக்கீரர் அழகாகப் படம் பிடித்துக் காட்டியது போல் எழுதியுள்ளார்.

> ***"மா மேயல் மறப்ப மந்தி கூர***
> ***பறவை படிவன வீழ, கறவை***
> ***கன்று கோள் ஒழியக் கடிய வீசி***
> ***குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்"***
>
> (நெ.வா. வரிகள்: 9-12)

விலங்குகள் மேய்ச்சல் தொழிலை மறந்தன. குரங்குகள் குளிரால் உடல் குறுகிக் கிடந்தன. வாடைக் காற்று வீசியதால் மரங்களிலிருந்துப் பறவைகள் கீழே விழுந்தன. பால் குடிக்க வந்த கன்றுகளை உண்ணவிடாமல் தாய்ப்பசுக்கள் உதைத்துத் தள்ளின. மலைகளே குளிரால் நடுங்கும் வண்ணம் கூதிர்காலம் விளங்கியது. இவை அனைத்தும் ஒரே இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அல்ல. ஆனால் இவற்றை ஒழுங்காகக் கோர்வைப்படுத்தி நக்கீரர் நம் மனக்கண்முன் கொண்டு வருகிறார்.

சுற்றுச்சூழல் வருணனை

மழைக்காலத்திற்குப் பின் செடி, கொடிகள், மரங்கள் நன்கு துளிர்த்து பூத்துக் குலுங்கும். எங்கும் பசுமைப் பட்டு விரித்திருக்கும்.

அவற்றின் மேல் பெய்த மெல்லிய சாரல் மழைத்துளிகள் காற்றில் கீழே சிந்தி விழும். மென்மையானக் கொடியை உடைய முசுண்டையின் வெண்ணிறப் பூக்களும், பொன் போன்ற பீர்க்கம் பூக்களும் பூத்துக் காணப்பட்டன.

"புன்கொடி முசுண்டை என்னும் அடைமொழி மலைபடு கடாமிலும் இடம் பெற்றுள்ளது. பைங்கால் கொக்கும் (பசுமை நிறமுடைய கால்கள்) செவ்வரி நாரையும் (சிவந்த கால்களையுடைய நாரை) கரிய வண்டால் மண்ணோடு கூடிய சேறு படிந்த ஈர நிலத்தில் நின்றுக் கொண்டிருந்தன" (கதிர்முருகு, பத்துப்பாட்டு, ப. 313).

அகன்ற வயல்வெளிகளில் நீர் நிரம்பியிருந்ததால் நன்கு வளமாக வளர்ந்த நெற்பயிரிலிருந்து கதிர்கள் வெளிவந்து நெல் மணிகள் நிறைந்து வளைந்திருந்த நெற்பயிர்களை "வண்தோட்டு நெல்" என்றும் அடைமொழியோடு குறிப்பிட்டுள்ளார்.

பாக்கு மரங்கள் பருத்த அடியினைக் கொண்டவை. அதன் கழுத்துப் பகுதி நீல மணி போன்ற நிறத்துடன் காணப்படும். உள்ளே தெளிந்த நீரை உடைய பாக்குக் காய்கள், உள்ளே இருக்கும் நுண்ணிய நீர் வற்றியதால் இனிமையுடைய பழங்களாக முதிர்ந்து விழும்.

மலை போன்ற கோபுரம்

மன்னராட்சிக் காலத்தில் ஒவ்வொரு மன்னரும் தன்னுடைய நிலப்பகுதியைச் சுற்றி கோட்டைக் கட்டியிருந்தனர். நுழைவு வாயிலுக்கு பெரிய கோபுரம் அமைத்திருந்தனர். அக்கோபுர வாயில் கட்டடங்கள் எல்வாவற்றையும் உள்ளடக்கியதாக உயரமாக காணப்பட்டது.

"ஒருங்கு உடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின் பரு இரும்பு பிணித்து செவ்வரக்கு ஒீஇ"

(நெ.வா.வரிகள்: 79, 80)

மதிலின் வாயிலில் அமைக்கப்பட்ட கதவுகள் பருத்த இரும்புகளால் பிணைக்கப்பட்டு, சாதிலிங்க குழம்பினால் சிவப்பு வண்ணம் பூசப் பெற்றிருந்தது. அக்கதவுகள் தாழ்ப்பாளுடன் சிக்கென பொருந்தும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. நிலைக்கு மேல் 27 நட்சத்திரங்களில் ஒன்றான உத்தரம் என்னும் நட்சத்திரப் பெயரைக் கொண்ட பலகைப் பொருத்தப்பட்டிருந்தது. அதில் அழகிய குவளை மலர்களைத் தங்கள் துதிக்கையில் ஏந்திய இரு யானைகளின் உருவமும், அவற்றின் நடுவில் திருமகளின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

சிறந்த தச்சனால் இடைவெளி இல்லாமல் பல மரங்களைச் சேர்த்து மதிலின் வாயில் உருவாக்கப்பட்டிருந்தது. வாயிலின் நிலை நெய் பூசப்பட்டு, வெண் சிறு கடுகு தூவப்பட்டு அழகுடையதாக விளங்கியது. அரசனின் வெற்றிக் கொடியைக் கொண்டு வரும் யானைகள் வருவதற்கு ஏற்றார் போல் மலையின் நடுவே வாயில் உண்டாக்கினதைப் போல் உயரமாகக் காணப்படும். தமிழர்கள் தங்கள் பாதுகாப்புக்காகக் கட்டிய கோட்டைக் கதவுகளில் கூட தங்கள் கலையுணர்வை வெளிப்படுத்தி இருந்தனர்.

அழகிய அந்தப்புரம்

அந்தப்புரம் என்றவுடன் அனைவரும் நினைப்பது, அரசனின் மனைவிமார்(ராணி) இருக்கும் இடம், அங்கு அழகும், மகிழ்ச்சியும் நிரம்பி இருக்கும் என்று. ஆனால் நக்கீரர் அதன் அழகை, பிற ஆடவர் அணுக இயலா பாதுகாப்பைக் கூறியதுடன், நாட்டை அடுத்து ஆளக்கூடிய இளவரசன் பிறப்பதற்குக் காரணமாக விளங்கும் இடமாதலால் அந்தப்புரத்தை இறைவன் உறையும் கருவறை என்று போற்றும் விதம் வருணனையின் உச்சம் (நெ.வா.வரிகள்: 108-114).

யவனர்கள் தங்கள் தொழில் திறம் விளங்கும்படி அழகாகச் செய்த பாவைகள் கையில் ஏந்திய விளக்குகளில் திரிகள் இட்டு கொளுத்தப்படும். இதனால் பகல்போல் எங்கும் ஒளி நிறைந்து காணப்படும்.

வட்டக் கட்டில்

பழங்காலத்தில் மன்னர்கள் பயன்படுத்திய ஒவ்வொரு பொருளும் கலைநயம் மிகுந்ததாகக் காணப்பட்டது. பொறுமையாக, மிகுந்த நுணுக்கமாக ரசித்துச் செய்யப்பட்ட பொருட்களையேப் பயன்படுத்தினர். அரசி படுக்கும் கட்டில் வட்ட வடிவில் செய்யப்பட்டது. வலிமை வாய்ந்த முரசு போன்ற கால்களை

உடையதும், சிறந்த அழகும், புள்ளிகளைக் கொண்ட நெற்றியை உடைய யானையின் தந்தத்தால் செய்யப்பட்டது. அவ்யானை வீரம் மிகுந்ததும் நாற்பது வயது நிரம்பியது ஆகும். போரில் இறந்த யானையின் தானே வீழ்ந்த தந்தங்களால் செய்யப்பட்டது. அதன் இடையே கூர்மையான உளியால் நுட்பமாக பெரிய இலை வடிவம் செதுக்கப்பட்டது.

கட்டிலின் காலில் அமைந்திருக்கும் குடம் கர்ப்பிணிப் பெண்களின் பால் முற்றிய நெஞ்சு போல் இருக்கும். குடத்திற்கும் கட்டிலுக்கும் நடுவே உள்ள இடம் உள்ளியின் வேர்ப்பகுதி போல நீண்டு அழகாகக் காணப்பட்டது (நெ.வா.வரிகள்: 124-131).

பஞ்சணை

கட்டிலின் மேல் அமைந்த படுக்கையில் பல் நிறமான மயிர்க்கற்றைகளைப் பரப்பி, சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது போன்ற காட்சிகள் பொறிக்கப்பட்ட தகடுகள் பதிக்கப்பட்டன. நாற்புறமும் முத்துக்கள் தொங்கவிடப்பட்டிருந்தது. முல்லைப் பூக்களும் ஏனைய பல பூக்களும் கட்டிலின் மேல் நிரப்பப்பட்டன.

"ஐந்து வகைப்படப் படுத்தலால் உயர்ந்த நீலப்பட்டால் செய்த மெல்லிய படுக்கை"

– நச்சினார்க்கினியர்

சிறுபூளை, செம்பஞ்சு, வெண்பஞ்சு, சேணம், அன்னத்தின் தூவி ஆகிய ஐந்து பொருள்களும் இடப்படுவதால் படுக்கைக்குப் பஞ்சணை என்ற பெயர் வந்தது. துணையைப் புணர்ந்த அன்னச் சேவலின் தூய நிறமுடைய நுண்ணிய முடிகள் பரப்பப்பட்டன. படுக்கையில் அன்னத்தின் முடியைப் பரப்புவது குறித்தச் செய்திகள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களில் காணப்படுகிறது (ஸ்ரீசந்திரன், ஐம்பெருங்காப்பியங்கள் தொகுதி - 13, ப. 101 மற்றும் சிலம்பொலி செல்லப்பன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ப. 212).

"புணர்ச்சியால் தூவிக்கு மென்மை பிறக்கும்ஞ" (சீவக சிந்தாமணி: 189)

"தன் சேவலோடு புணர்ந்த அன்னப் பேடை அப் புணர்ச்சியாள் உருகி, உதிர்த்த வயிற்றின் மயிர் எ.ஃகிப் பெய்த பல் வகை அணை மீதே"

(சிலப்பதிகாரம் -4:58)

மாலைக்கால வருணனை

கூதிர்காலமாதலால் இரவும், பகலும் அறியாது பெண்கள் இருந்தனர். இவர்கள் மாலை மலரும் மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதை வைத்து பொழுது அறிந்தனர். இரும்பினால் செய்யப்பட்ட விளக்கில் நெய் ஊற்றி தீபம் ஏற்றினர். அவ்விளக்கையே தெய்வமாகக் கருதி நெல்லும் மலரும் தூவி வழிபட்டனர். இதனைச் சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கிறது.

"அகன் நகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை நிகர் மலர் நெல்லோடு தூஉய்ப் பகல் மாய்ந்த மாலை"

(சிலப்பதிகாரம்:9-1)

உவமைகள்

புலவர் தான் சொல்லக் கருதியக் கருத்தை நன்கு விளக்குவதற்கு பொருத்தமுடைய வேறொரு கருத்துடன் ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை எனப்படும். பொருளை விளக்குவதற்கு மட்டுமின்றி இலக்கிய அழகுக்காகவும் உவமைகள் பயன்படுத்தப் படுகின்றன. இவை இலக்கியத்திற்குச் சிறந்த அணிகலன்களாக விளங்குகின்றன. உவமைகள் படிப்போரின் கற்பனைக்கு விருந்தாக அமைகின்றன.

"பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின் ஒன்றும் பலவும் பொருளோரு பொருள் புணர்ந்து ஒப்புமை தோன்றச் சப்புவது உவமை"

என்று தண்டியலங்காரம் உவமைக்கு இலக்கணம் தருகின்றது. பொருத்தமில்லாத இரண்டு பொருள்களை உவமிக்கக்கூடாது. பொருத்தமான ஒன்றோடுதான் ஒப்புமைப்படுத்த வேண்டும். அதேபோல் அறியாத ஒன்றைக் கூறும்போது நன்கு அறிந்த ஒன்றுடன் இணைத்துக் கூறும் பொழுது உவமைச் சிறக்கும். இப்படி நெடுநல்வாடையில் 30க்கும் மேற்பட்ட அழகிய உவமைகள் உள்ளன.

கவுள்புடையூஉ நடுங்க - கோவலர்களின் பற்கள் குளிரால் பறையடிப்பது போல் அடித்துக் கொண்டன.

பொன் போல் பீரம் - பீர்க்கம் பூக்கள் பொன் நிறத்தில் இருந்தன.

மணி உறழ் எருத்து - பாக்கு மரங்களின் கழுத்துப்பகுதி நீல மணி போன்று காணப்படும்.

வில் கிடந்தன்ன கொடி - மலைகளைச் சுற்றி வானவில் கிடப்பது போல அரண்மனையில் பல நிறக் கொடிகள் அசைந்துத் தொங்கும்.

பெண்களை வருணிக்கப் பயன்படுத்தப்பட்ட உவமைகள்

பெண்கள் பொறுமை, அன்பு, கற்பு, தாய்மை, தியாகம் முதலிய குணங்களைப் பெற்றவர்கள். ஆதலால் எப்பொழுதும் அவர்கள் அழகுடனேத் திகழ்வர். அவர்களின் ஒவ்வொரு அங்கங்களையும் சிறந்த பொருட்களுடன் ஒப்பிட்டு பாடுவது கவிஞர்களின் வழக்கம்.

தோள்கள் - மெத்தென்ற மூங்கில் போன்ற தோள்கள்

பல் - முத்துப் போன்ற பற்கள்

கண் - மழை போன்ற குளிர்ந்த அழகிய கண்கள்

நிறம் - மாந்தளிர் போன்ற நிறம்

புனையா ஓவியம்

அரசமாதேவி அரசன் போருக்குச் சென்றதால் கழுத்தில் மங்கல நாணானத் தாலியை மட்டும் அணிந்திருந்தார். நெற்றிப்பகுதியில் ஒப்பனை செய்யவில்லை. கூந்தல் மென்மையாக வறண்டு காணப்பட்டது. ஒளி வீசும் மகரக் குழை அணியப்பெறும் காதில் வெறும் கம்மல் மட்டும் அணியப் பெற்றிருந்தது. பொன் வளையல் அணியும் கைகளில் சங்கு வளையல்கள் அணிந்து காப்பு நாண் கட்டியிருந்தார். பட்டாடைத் தவிர்த்து நூல் ஆடை அணிந்திருந்தார். இத்தோற்றத்தை நக்கீரர் வண்ணம் தீட்டப்படாத ஓவியத்துடன் ‘‘புனையா ஓவியம்’’ என்று வருணிக்கிறார். திருத்தக்கத் தேவரும் முதன் முதலாக அமுத சுரபியில் உணவுப் பெறுவதற்கு ஆதிரை வீட்டிற்குத் துறவி கோலத்தில் சென்ற மணிமேகலையைப் புனையா ஓவியம் போல் நின்றதாகக் குறிப்பிடுகிறார் (வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை ப. 189).

முடிவுரை

கலை கலைக்காகவா, வாழ்க்கைக்காகவா என இரு வாதங்கள் உண்டு. வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறும் நூல்களில் அழகியல் கூறுகள் இல்லையென்றால் மக்களுக்கு வெறுப்புத் தட்டிவிடும். நாம் உடலுக்கு நன்மைத் தரும் கசப்பு மருந்துகளைக் கூட தேனில் கலந்து தான் சாப்பிடுவோம். அந்த வகையில் பார்த்தோமேயானால் நெடுநல்வாடையில் படித்து, ரசித்து இன்புறத் தக்க பல வருணனைகள் இடம் பெறுகின்றன. சங்கத் தமிழர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியையும், பொருள்களையும் ரசித்து வாழ்ந்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய கலையுணர்வோடு வாழ்ந்தோமானால் கோபம், வெறுப்பு, பகை போன்ற குணங்கள் இல்லாமல் எங்கும் அமைதியும், அழகும் தழைக்கும்.

பார்வை நூல்கள்

சேலை சகதேவ முதலியார் கழகத்தமிழ்க் கையகராதி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்பு கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, 1997, ப. 313.

கதிர்முருகு, பத்துப்பாட்டு, சாரதா பதிப்பகம், தி நகர், சென்னை, 2011, ப. 313.

ஸ்ரீசந்திரன், ஐம்பெருங்காப்பியங்கள் தொகுதி - 13, முல்லை நிலையம், சென்னை, தமிழ்நாடு, 2000, ப. 101.

சிலம்பொலி செல்லப்பன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, தமிழ்நாடு, 1994, ப. 212, 246,

ந.மு. வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்பு கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, 1990, ப. 189.

To cite this article

****

Santhini, M. (2026). நெடுநல்வாடையில் இடம்பெறும் வருணனைகள். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 9*(3), 31-36.

****

ABOUT THE AUTHOR



Dr M. Santhini *has been serving as an Assistant Professor in the Department of Tamil at Vivekananda College, Agastheeswaram, Kanyakumari District, Tamil Nadu, since 2008. She has over 16 years of teaching experience in Tamil literature and research, including guiding research scholars and contributing through published and presented papers. She cleared the State Eligibility Test (SET) in 2011 and was awarded a Ph.D. in 2015. Her academic interests include Tamil Literature, Literary Criticism and Research Guidance. She is currently guiding 4 Ph.D. scholars. She has presented and published several research papers in National and International Seminars and Journals.*

****